**நீநீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, உடுமலைப்பேட்டை.**

**முன்னிலை. திருமதி.T.நித்யகலா, பி.காம்., பி.எல்.,**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**உடுமலைப்பேட்டை.**

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06 ஆம் நாள் சனிக்கிழமை

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண். 42/2024**
**in**
**குற்றவியல் பல்வகை மனு எண். 659/2025**

எஸ். பாஸ்கரன் (50),
த/பெ. சாமிநாதன்,
க.எண்.20/10-B2, வால்பாறை மெயின் ரோடு,
ஆனைமலை தாலுக்கா,
கோயம்புத்தூர் மாவட்டம்.

...மனுதாரர்/எதிரி

/எதிரி/

எஸ். வினோத்குமார் (35),
த/பெ. சுப்ரமணியன்,
க.எண். 314/6, GVG நகர்,
பழனி தாலுக்கா,
திண்டுக்கல் மாவட்டம்.

...எதிர்மனுதார்/புகார்தாரர்

இந்த மனுவானது 23.09.2025 ஆம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் கோப்புக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் திருமதி.S.ஸ்ரீமதி, B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.N.D.சிவகுரு, B.A., B.L., அவர்கள் ஆஜராகியும், இருதரப்பின் வாதத்தைக் கேட்டறிந்தும் இதுநாள் வரை இந்நீதிமன்றம் பரிசீலனையில் இருந்த வரை இன்று இந்நீதிமன்றத்தால் வழங்கப்படும்,

**உத்தரவு**

மனுதாரர்/எதிரி இந்த மனுவை பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 348—ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்.

**1. மனுதாரர்/எதிரி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் கீழ்க்கண்டவாறு :**

(01.01) மனுதாரர்/எதிரி தனது மனுவில் மனுதாரர்/எதிரியானவர் கடந்த 21.05.2023 ஆம் தேதியன்று எதிர்மனுதாரர்/புகார்தாரரிடம் ரூ.10,00,000/— ரொக்கமாக தனத தொழில் தேவைக்காக வாங்கினார் என்றும், மேற்படி தொகைக்கு 1 சதவீதம் வட்டி தருவதாக கூறி 6 மாதங்களில் திருப்பி செலுத்திவிடுவதாகவும், அதே நாளில் மேற்படி தொகைக்கு ஒரு பிராம்சரி நோட்டு எழுதி கொடுத்ததாகவும், பின்னிட்டு எதிர்மனுதாரர் மேற்படி தொகையை பலமுறை கேட்டபோது மனுதாரர் எதிர்மனுதாரரின் வீட்டில் வந்து 01.12.2023 ஆம் தேதியிட்ட HDFC வங்கி, மகாபலிபுரம் காசோலையை எதிர்மனுதாரருக்கு கொடுத்ததாகவும், மேற்படி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்தபோது Fund insufficient என்ற காரணத்துடன் திருப்பப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார்.

(01.02) மேலும் மேற்படி மனுவில் எதிர்மனுதாரருக்கும் மனுதாரருக்கும் எவ்வித வரவு செலவும் இல்லை என்றும், இந்த எதிர்மனுதாரரை யார் என்றே தெரியாது என்றும் மனுதாரர் Style KRB Coirs and papaers Private Ltd. என்ற பெயரில் வேஸ்ட் பேப்பர் தொழில் செய்து வருவதாகவும், மேற்படி வழக்கு காசோலை மற்றும் இதர காசோலை ஆகியவற்றை மனுதாரரானவர் வயலூாரைச் சேர்ந்த கனகராஜ் என்கிற குமரவேல் என்பவரிடம் வியாபார பரிவர்த்தனைக்கு செக்யூரிட்டிக்காக கொடுத்ததாகவும், பின்னிட்டு முழு

தொகையும் வங்கி பரிவர்த்தனை மூலம் செலுத்தி விட்டதாகவும், ஆனால் கனகராஜ் (எ) குமாரவேல் என்பவர் மேற்படி தொகையை பெற்றுக் கொண்டு மேற்படி காசோலையை மனுதாரரிடம் திருப்பி தராமல் எதிர்மனுதாரர் வைத்து அதிக பணம் பறிக்கும் நோக்கில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(01.03) மேலும், மேற்படி மனுவில் கனகராஜ் என்கிற குமரவேல் செக்யூரிட்டிக்காக கொடுத்த மற்றொரு காசோலையை வைத்து பிரதீப் என்பவர் மூலம் மனுதாரருக்கு எதிராக STC No.21/2024 ல் மாண்புமிகு விரைவு நீதிமன்றம் பழனியில் காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படியாளர்களின் இணைப்பு பற்றிய சங்கதிகளை நிரூபிக்க வேண்டியும், இவ்வழக்கின் ஆவணங்களை எதிர்மனுதாரர் மூலம் குறியீடு செய்ய வேண்டியும் இம்மனு தாக்கல் செய்துள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

(01.04) மேலும் மனுதாரர் மாண்புமிகு விரைவு நீதிமன்றம் பழனியில் நகலுக்காக மனு தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பு, காசோலை, புகார் மற்றும் பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றை எதிர்மனுதாரர்/புகார்தாரர்/பு.சா.1 ன் மூலம் குறியீடு செய்து மனுதாரர் தனது வழக்கை நிரூபிக்கவும், எதிர்மனுதாரரை (பு.சா.1) அழைத்து விசாரணை செய்ய இவ்வழக்கை மீள் திறப்பு செய்ய வேண்டி தக்க உத்தரவிடுமாறும் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்

**2. எதிர்மனுதாரர்/புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம் கீழ்க்கண்டவாறு :**

(02.01) இவ்வழக்கில் இம்மனுதாரருக்கு எதிராக இவ்வழக்கு காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்து, எதிர்மனுதாரரை கடந்த 08.08.2025 ம் தேதியில்

மனுதாரர் தரப்பில் முழுமையாக குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டது என்றும், மனுதாரரை 313(1)(b) கேள்விக்காக வாய்தா போடபட்டுள்ள நிலையில் மனுதாரரானவர் எதிர்மனுதாரரை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய ரீ–கால் மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(02.02) இந்நிலையில் எதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் கடந்த 08.08.2025 ஆம் தேதியில் குறுக்கு விசாரணை செய்த போது மனுவில் தெரிவித்துள்ள சங்கதிகளை பொறுத்து கேள்விகள் கேட்டப்பட்டது என்றும், எதிர்மனுதாரரானவர் மனுதாரரின் மேற்படி மனுவில் சொல்லப்பட்ட நபரை தனக்கு யார் என்றே தெரியாது என்றும், அதை மறுத்தும் தெள்ளத் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், எனவே எதிர்மனுதாரரால் ஏற்கனவே மறுக்கப்பட்ட மேற்படி சங்கதிகளை பொறுத்தும் மேற்படி வழக்கின் ஆவணங்களையும் எதிர்மனுதாரர் மூலம் குறியீடு செய்ய வேண்டியும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

(02.03) மேலும், மனுவில் மனுதாரர் தெரிவித்துள்ள சங்கதிகளையும், மேற்படி வழக்கு ஆவணங்களைப் பொறுத்தும் இவ்வழக்கின் மனுதாரர் தன்னை ஒரு சாட்சியாக விசாரித்து மேற்படி வழக்கு ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய மனுதாரருக்கு எவ்வித தடையும் இல்லை என்றும், மேலும் மனுதாரர் தரப்பில் தெரிவித்துள்ள வயலூரைச் சேர்ந்த கனகராஜ் என்கிற குமரவேல் என்பவரை மனுதாரர் தரப்பில் சாட்சியாக விசாரிக்கவும் இவ்வழக்கு ஆவணங்களை அவரது தரப்பில் குறியீடு செய்ய எவ்வித தடையும் இல்லை என்றும், ஆகவே மேற்கண்ட காரணங்களினால் எதிர்மனுதாரரை ரீகால் செய்ய வேண்டிய அவசியம் எதுவும் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே இவ்வழக்கை காலதாமதம் ஏற்படுத்தவும், எதிர்மனுதாரரை மேலும்

அலைக்கழிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு மனுதாரர்/எதிரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் குறிப்பிட்டு மேற்படி இம்மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இருதரப்பு வாதங்கள் மற்றும் ஆவணங்களும் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

**3. இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா 2023, பிரிவு 348–ன் கீழான இந்த மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதே ஆகும் ?**

(03.01) இம்மனுவின் அசல் மனுவானது கடந்த 23.02.2024 ம் தேதியன்று நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு STC No.42/2024 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது.

(03.02) இந்நிலையில், மனுதாரர்/எதிரி தனது மனுவில் எதிர்மனுதாரை தனக்கு யார் என்றே தெரியாது என்றும், தொழில் சம்பந்தமாக கனகராஜ் (எ) குமாரவேல் என்பவரிடம் செக்யூரிட்டிக்காக கொடுக்கப்பட்ட காசோலையை வைத்து எதிர்மனுதாரர் மூலம் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேலும் அவரிடம் கொடுத்த மற்றொரு காசோலையை வைத்து பழனி விரைவு நீதிமன்றத்தில் பிரதீப் என்பவரை வைத்து STC 21/2024 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டள்ளது என்றும் மேற்படி வழக்கின் ஆவணங்களை PW1(புகார்தாரர்/எதிர்மனுதாரர்)–யை அழைத்து விசாரணை செய்து மனுதாரர் தரப்பு ஆவணமாக குறியீடு செய்ய வேண்டும் என்று இவ்வழக்கை மீள் திறப்பு செய்ய வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(03.03) மேலும் எதிரிமனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரை கடந்த 08.08.2025 ம் தேதியில் மனுதாரர் தரப்பில் முழுமையாக குறுக்கு விசாரணை செய்து முடிக்கப்பட்டது என்றும், மனுவில் மனுதாரர் தெரிவித்துள்ள சங்கதிகளையும், மேற்படி வழக்கு ஆவணங்களைப் பொறுத்தும் இவ்வழக்கின் மனுதாரர் தன்னை ஒரு சாட்சியாக விசாரித்து மேற்படி வழக்கு ஆவணங்களை மனுதாரர் தரப்பில் குறியீடு செய்ய மனுதாரருக்கு எவ்வித தடையும் இல்லை என்றும், மேலும் மனுதாரர் தரப்பில் தெரிவித்துள்ள வயலூாரைச் சேர்ந்த கனகராஜ் என்கிற குமரவேல் என்பவரை மனுதாரர் தரப்பில் சாட்சியாக விசாரிக்கவும் இவ்வழக்கு ஆவணங்களை அவரது தரப்பில் குறியீடு செய்ய எவ்வித தடையும் இல்லை என்றும், ஆகவே மேற்கண்ட காரணங்களினால் எதிர்மனுதாரரை ரீகால் செய்ய வேண்டிய அவசியம் எதுவும் இல்லை, இவ்வழக்கை காலதாமதம் ஏற்படுத்தவே மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும் குறிப்பிட்டு இம்மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டுள்ளது.

(03.04) இந்நிலையில் வழக்காவணங்களைப் பரிசீலிக்கையில் இம்மனுவின் எதிர்மனுதாரரை கடந்த 17.02.2025 ஆம் தேதியன்று முதல் விசாரணையும், கடந்த 08.08.2025 ஆம் தேதியன்று குறுக்கு விசாரணையும் செய்யப்பட்டுள்ளது. மேலும், எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் கடந்த 08.08.2025 ஆம் தேதியில் குறுக்கு விசாரணை செய்த போது எதிர்மனுதாரரானவர் மனுதாரரின் மேற்படி மனுவில் சொல்லப்பட்ட நபரை தனக்கு யார் என்றே தெரியாது என்று மறுத்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது தெரியவருகிறது.

(03.05) மேலும் இவ்வழக்கு சாராம்சம் குறித்து தொகுத்து கடந்த 22.05.2024 ஆம் தேதியன்று குற்றவியல் நடைமுறை தொகுப்பு 1973, பிரிவு 313 (1) (b)–ன் கீழ் கேள்விக் கேட்கப்பட்ட போது எதிரியானவர் மேற்படி பழனி, விரைவு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரர் இம்மனுதாரர் கொடுத்த மற்றொரு காசோலையை வைத்து STC No.21/2024 என்ற எண்ணில் பிரிதொரு வழக்கை பிரதீப் என்பவர் மூலம் தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிட்டுள்ள சங்கதிகளை முன்மொழியவில்லை. இச்சங்கதிகளை முன்மொழிந்து பதில் அறிவிப்பு அனுப்பப்பட்டதாக தெரியவரவில்லை.

(03.06) மேலும், இம்மனுதாரர் தனது மனுவில் மேற்படி STC No.21/2024 வழக்கின் வழக்கறிஞர் அறிவிப்பு, காசோலை, புகார் மற்றும் பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றை நகலுக்காக மனு தாக்கல் செய்துள்ளதாக சொல்லியுள்ள நிலையில், மேற்படி நகலுக்காக செய்துள்ளதற்கான மனுவின் நகலினையும் இம்மனுவிற்கான சான்றாவணமாக தாக்கல் செய்யவில்லை என்பதும் தெரியவருகிறது.

(03.07) இந்நிலையில் கடந்த 06.02.2026 ஆம் தேதியன்று இருதரப்பு விவாதங்கள் கேட்கப்பட்டு உத்தரவுக்காக வாய்தா போடப்பட்டிருந்த நிலையில் கடந்த 07.03.2026 ஆம் தேதியன்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்ட ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டி வாய்ப்புகள் வழங்கும் பொருட்டு, 13.03.2026, 18.03.2026, 10.04.2026, 15.05.2026 மற்றும் 25.05.2026 ஆகிய தேதிகளில் போதுமான வாய்ப்பு வழங்கியும் மனுதாரர் தரப்பில் மனுவில் கூறப்பட்ட ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகையினால், மனுதாரர் கடந்த 29.09.2025 ஆம் தேதி முதல் இம்மனு நிலுவையில் உள்ள நிலையில் இது நாள்

வரையில் எதிரி தரப்பில் மேற்படி STC No.21/2024 என்ற வழக்கின் ஆவணங்களின் நகல் கோரி தாக்கல் செய்துள்ளதாக கூறப்பட்ட மனுதாரர் தரப்பு வாதத்தை ஊர்ஜிதம் செய்ய தவறியுள்ளார் என்பதாலும், மேற்படி ஆவணங்களை புகார்தாரர் மூலம் குறியீடு செய்யக் கோரிய காரணம் போதுமானதாக அமையாததாலும் இம்மனுவினை தள்ளுபடி செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

(03.08) மேலும், எதிர்மனுதாரர்/புகார்தாருக்கு ஏற்பட்ட காலதாமத நேர விரையத்திற்காகவும், இன்னல்களுக்காகவும் ரூ.1,000/- செலவுத் தொகையுடன் இம்மனுவை தள்ளுபடி செய்ய இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**(03.09) இறுதியாக, இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ஆண்டு ஜூன் திங்கள் 06 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

NITHYAKALA T

Digitally signed by NITHYAKALA T
Date: 2026.06.06 18:11:36 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
உடுமலைப்பேட்டை.